நவம்பர் 6, 2020 அன்று புதுப்பிக்கப்பட்டது

# சுய தனிமைப்படுத்தலுக்கான கோவிட்-19 கிளாஸ் ஆர்டர்

**கோவிட்-19 கிளாஸ் ஆர்டர் என்றால் என்ன?**

“கிளாஸ் ஆர்டர்” என்பது மக்களுக்கு நோய்தொற்று ஏற்படாதவரை அவர்கள் வீட்டில் இருந்து, சுயமாக தனிமைப்படுத்திக்கொள்வதை வழிவகுக்கும். இதன் நோக்கமானது கோவிட்-19 பரவலைக் குறைப்பதும், டொரோண்டோவில் உள்ள அனைவரின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதே ஆகும்.

**டொரோண்டோ பொது ஆரோக்கியத்துறை ஓர் கிளாஸ் ஆர்டரை வழங்க முடியுமா, அது எவ்வளவு காலம் செயல்பாட்டில் இருக்கும்?**

மாகாண ஆரோக்கிய பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்பு சட்டமானது ஆரோக்கிய மருத்துவ அதிகாரி ஓர் “கிளாஸ் ஆர்டரை” வழங்குவதற்கு அனுமதிக்கும். சட்டமானது ஏப்ரல் 1, 2020 அன்று செயல்படுத்தப்பட்டது மற்றும் நவம்பர் 6, 2020 அன்று புதுப்பிக்கப்பட்டது. ஆரோக்கிய மருத்துவ அதிகாரி இது தேவைப்படாது என்று தெரிவிக்கும்வரை, இந்தச் சட்டம் அமலில் இருக்கும்.

**கிளாஸ் ஆர்டர் யாருக்கு பொருந்தும்?**

கிளாஸ் ஆர்டர் பின்வருபவர்களுக்குப் பொருந்தும்:

- கோவிட்-19 அறிகுறிகளுடன் கூடிய நபர்கள்.
- கோவிட்-19 தொற்று இருப்பதாக உறுதி செய்யப்பட்டவர்கள்.
- கோவிட்-19 தொற்று உறுதி செய்யப்பட்ட எவருடனேனும் நெருக்கமான தொடர்பு வைத்திருக்கும் நபர்கள். இதில் பராமரிப்பாளர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களும் அடங்குவார்கள்.

**எவ்வளவு காலம் மக்கள் தன்னைத்தானே தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும்?**

புதிய பொது ஆரோக்கிய வழிமுறைகளை உள்ளடங்க, புதுப்பிக்கப்பட்ட கிளாஸ் ஆர்டரில் சுயமாக தனிமைப்படுத்திக்கொள்ளுதல் தேவைப்பாடுகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

மிதமான அல்லது லேசான நோய்வாய்ப்படுதல் உள்ள நபர்கள் அவர்களின் அறிகுறிகள் தொடங்கிய பிறகு 10 நாட்கள் வரை தனிமைப்படுத்திக்கொள்ளவேண்டும். தீவிர நோய்வாய்ப்படுதல் அல்லது தீவிர நோய்எதிர்ப்பு-குறைபாடு உள்ளவர்கள் 20 நாட்களுக்கு தனிமைப்படுத்திக்கொள்ளவேண்டும். கோவிட்-19 தொற்று உறுதி செய்யப்பட்டவர்களுடன் நெருக்கமாக இருக்கும் நபர்கள், தங்களது அறிகுறிகள் தோன்றுவதற்கு தேவைப்படும் காலமான, அந்த நபருடன் கடைசியாக தொடர்பு கொண்ட நாளுக்கு பிறகு 14 நாட்கள் வரை தனிமைப்படுத்திக்கொள்ளவேண்டும்.

**இந்த கிளாஸ் ஆர்டரிலிருந்து எவருக்கேனும் விதிவிலக்கு உள்ளதா?**

அறிகுறிகள் இல்லாமல் நெருங்கிய தொடர்புகள் கொண்ட சில இன்றியமையாத சேவை பணியாளர்கள் பணிக்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். இருப்பினும், அவர்கள் பணியில் இல்லாத நேரத்தில் அல்லது பணிக்காக பயணம் மேற்கொள்ளத நேரத்தில் தங்களைத் தானே தனிமைப்படுத்திக்கொள்ளவேண்டும். வீட்டு வன்முறை காரணமாக வெளியேறும் நபருக்கு விதிவிலக்கு அளிக்கபடும். டொரோண்டோ பொது ஆரோக்கியத்துறை ஒவ்வொரு நிகழ்வுக்கான விதிவிலக்குகளை மீள்பார்வை செய்யும்.

சுய-தனிமைப்படுத்தலில் இருக்கும் நபர்கள் மருத்துவ பரிசோதனைக்கும் செல்லலாம். ஓர் மருத்துவ பரிசோதனை அல்லது மருத்துவமனைக்குச் செல்வதற்கு முன், அதற்கான அறிவுறுத்தல்களைத் தெரிந்துகொள்வதற்காக டொரோண்டோ பொது ஆரோக்கியத்துறையை 416-338-7600 என்ற எண்ணில் தொடர்புகொள்ளவேண்டும்.

**சுய தனிமைப்படுத்துதல் எவ்வாறு செயல்புரியும்?**

சுய-தனிமைப்படுத்துதல் என்பது வீட்டில் தனிமைப்படுத்திக்கொள்வது அல்லது ஓர் தனிமைப்படுத்தல் இடத்தில் வசித்தல் என்பதாகும். வெளியில் செல்லவோ அல்லது வீட்டிற்கு விருந்தாளிகள் வருவதோ கூடாது. மற்றவர்களுடன்

நவம்பர் 6, 2020 அன்று புதுப்பிக்கப்பட்டது

நெருக்கமாக இருப்பதை தவிர்க்கவேண்டும். உங்களுக்கான பொருட்களை ஆன்லைனில் ஷாப் செய்யவும் அல்லது எவரேனும் உங்கள் சார்பில் அவற்றை ஷாப் செய்யவேண்டும். மளிகைப் பொருட்கள், பரிந்துரை மருந்துகள் அல்லது இதர சேவைகளுக்கு உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், டொரோண்டோ பொது ஆரோக்கியத்துறையை 416-338-7600 என்ற எண்ணில் தொடர்புகொள்ளவேண்டும்.

நீங்கள் வசிக்கும் நபர்களுடன் கூடுமானவரை தூரத்தை கடைபிடிக்கவும். உங்கள் இடத்தில் தனி அறை அல்லது படுக்கையறை இருந்தால் அதைப் பயன்படுத்தவும். பகிரும் அறைகள் இருந்தால், நல்ல காற்றோட்டம் பெறுவதற்கு ஜன்னல்களைத் திறந்து வைக்கவும். எவ்வாறு சுய-தனிமைப்படுத்திக்கொள்ளுதல் என்பதைப் பார்க்கவும்.

வீடு இல்லாதவர்கள், போதுமான வீடு வசதி இல்லாதவர்கள், அல்லது வீட்டில் பாதுகாப்பு இல்லை என்று உணருபவர்களுக்கு தற்காலிக அடைக்கலம் வழங்கப்படும்.

**எவரேனும் சுய-தனிமைப்படுத்தல் செய்துகொள்ளவில்லை என்றால் என்ன நேரும்?**

சுய-தனிமைப்படுத்தலுக்கான கிளாஸ் ஆர்டரை மீறும் எந்த ஒரு நபருக்கும் ஒரு நாளுக்கு $5,000 வரை அபராதம் விதிக்கப்படும். உதவிக்கு காவல் துறையின் உதவியும் நாடப்படும்.

**புதுப்பிக்கப்பட்ட கிளாஸ் ஆர்டரில் வேறு எந்த விஷயங்கள் மாற்றப்பட்டுள்ளன?**

கோரிக்கையின் பெயரில், கிளாஸ் ஆர்டரின்கீழ் வரும் நபர்கள் தங்கள் பெயர்கள் மற்றும் தொடர்பு விவரங்கள் (தொலைபேசி எண்கள், முகவரிகள், மின்னஞ்சல் முகவரிகள்), மற்றும் நெருக்கமான தொடர்பில் இருந்த நபர்கள் டொரோண்டோ பொது ஆரோக்கியத்துறையால் குறிப்பிட்ட நாட்கள் மற்றும் நேரத்தையும் அவர்களிடம் கட்டாயம் வழங்கவேண்டும். இந்த தகவல் தொடர்பு பின்தொடர்தலுக்காக மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்.

**கிளாஸ் ஆர்டருக்கு எதிராக எவரேனும் சட்டரீதியாக எதிர்ப்பு தெரிவிக்க முடியுமா?**

கிளாஸ் ஆர்டரில் பட்டியலிடப்பட்டுள்ள நபர், ஆரோக்கிய சேவைகள் மேல்முறையீடு மற்றும் மீள்பார்வை அமைப்பிடம் மேல்முறையீடு செய்யலாம்.

**தனிமைப்படுத்தல் சட்டத்தின்கீழ் கூட்டாட்சி ஆணை குறித்து தெரிந்துகொள்ள நான் என்ன செய்யவேண்டும்?**

கூட்டாட்சி தனிமைப்படுத்தல் ஆணை கனடாவிற்குள் நுழையும் அனைத்து பயணிகளுக்கும் மார்ச் 25, 2020 அன்று முதல் பொருந்தும். இதில் அனைத்து பயணிகளும் 14 நாட்களுக்கு சுய தனிமைப்படுத்தல் மேற்கொள்ளவேண்டும். மேலும் தகவல்களுக்கு இங்கே பார்க்கவும்.

சில நிலைகளில், கூட்டாட்சி ஆணையின் கீழே தனிமைப்படுத்தல் தேவைப்படும் நபர்கள் டொரோண்டோவின் ஆரோக்கிய மருத்துவ அதிகாரி வழங்கும் ஆணைக்கு உட்படலாம் (உதாரணமாக, கோவிட்-19 தொற்று கண்டறியப்பட்ட அன்பர்கள் மற்றும் சமீபத்தில் பயணம் மேற்கொண்டு திரும்பியவர்கள்).

**மேலும் தகவல்கள்**

ஆரோக்கிய மதிப்பீட்டிற்கு, உங்கள் மருத்துவரின் அலுவலகத்தை அல்லது டெலிஹெல்த் ஒண்டாரியோவை 1-866-797-0000 என்ற எண்ணில் அழைக்கவும். கிளாஸ் ஆர்டர் குறித்த மேலும் தகவல்களுக்கு, டொரோண்டோ பொது ஆரோக்கியத்துறையை 416-338-7600 என்ற எண்ணில் அழைக்கவும்.